ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1927/51 - 2015 අගෝස්තු මස 13 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.08.13

*1927/51 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இலக்கம் : 6/3/7/15/5/4/(P)
காணி அமைச்சின் குறிப்பு இல.: LD/05/2007/MV/110D

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியாளர் எண்ணியிருககிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

இங்கு ஒரு பகிரங்க தேவையென்பது மொரகஹகந்த மற்றும் களுகங்கை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் காணி எடுத்தலாகும்.

மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தில் லக்கல பல்லேகம பிரதேச செயலாளர் பிரிவிலே கங்கல பல்லேசிய பத்துவ E 407 A தலாகொட பிரிவில் அமைந்துள்ள, நிலஅளவையாளர் நாயகத்தினால் 2010.10.28 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட பூ. பூ.வ. இல. 17 இல் குறைநிரப்பி இல. 58 இல் பத்திர இல. 43 கொண்டவரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு.

1. **துண்டு இல. 1694**

காணியின் பெயர்: கும்புக்கொல்லயாய அல்லது கும்புக்கொல்ல; காணியின் விபரம்: பற்றைக்காடு; உரிமை கோருவோர்: அரசு; விஸ்தீரணம்: 0.6355 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 02 ஆந் தேதி மு.ப. 9.00 மணிக்கு நாவுல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும். மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2015 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 26 ஆந் தேதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பிரதேச செயலாளர்,
நாவுல.

பிரதேச செயலகம்,
நாவுல,
2015, ஒகத்து 11.

8- 811/1

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இலக்கம் : 6/3/7/15/5/5/(P).
காணி அமைச்சின் குறிப்பு: LD/05/2007/MV/110A.

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழக்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியாளர் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

இங்கு ஒரு பகிரங்க தேவையென்பது மொரகஹகந்த மற்றும் களுகங்கை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் காணி எடுத்தலாகும்.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தில் லக்கல பல்லேகம பிரதேச செயலாளர் பிரிவிலே கங்கல பல்லேசிய பத்துவ E 407 A தலாகொட பிரிவில் அமைந்துள்ள, நிலஅளவையாளர் நாயகத்தினால் 2010.09.30 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட பூ. பூ.வ. இல. 17 இல் குறைநிரப்பி இல. 12 இல் பத்திர இல. 42 கொண்ட வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித் துண்டு.

1. **துண்டு இல. 1637**

காணியின் பெயர்: கும்புக்கொலேலயாய; காணியின் விபரம்: காடு மற்றும் சேனை; உரிமை கோருவோர்: அரசு; விஸ்தீரணம்: 0.0519 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 02 ஆந் தேதி மு.ப. 9.00 மணிக்கு நாவுல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்.

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2015 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 26 ஆந் தேதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பிரதேச செயலாளர்,
நாவுல.

பிரதேச செயலகம்,
நாவுல,
2015, ஓகத்து 11.

8- 811/2

---

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இலக்கம் : 6/3/7/15/5/4/(P)
காணி அமைச்சின் குறிப்பு: LD/05/2007/MV/110B

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழக்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியாளர் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

இங்கு ஒரு பகிரங்க தேவையென்பது மொரகஹகந்த மற்றும் களுகங்கை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் காணி எடுத்தலாகும்.

மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தில் லக்கல பல்லேகம பிரதேச செயலாளர் பிரிவிலே கங்கல பல்லேசிய பத்துவ E 407 A தலாகொட பிரிவில் அமைந்துள்ள, நிலஅளவையாளர் நாயகத்தினால் 2010 செத்தெம்பர் 30 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட பூ. பூ.வ. இல. 535 இல் குறைநிரப்பி இல. 6 இல் பத்திர இல. 3 கொண்டவரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித் துண்டு.

1. **துண்டு இல. 603**

காணியின் பெயர்: பிளின்வத்த அல்லது கொக்கலயாய; காணியின் விபரம்: வயல்; உரிமை கோருவோர்: தலாகொட, தலாகொட சந்தியில் வதியும் திருமதி ஹேரத் முதியன்சலாகே கருணாவதி; விஸ்தீரணம்: 0.6379 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 02 ஆந் தேதி மு.ப. 9.00 மணிக்கு நாவுல பிரதேசச் செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2015 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 26 ஆந் தேதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பிரதேச செயலாளர்,
நாவுல.

பிரதேச செயலகம்,
நாவுல,
2015, ஓகத்து 11.

8- 811/3

---

## திருத்தம்

### 1964 ஆம் ஆண்டின 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தல சட்டத்தின் (அததியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல. ஆர்டீஏ/காசு/சீஓஎல்/2013/3(ஏ)

2014 மே 08 ஆம் திகதிய 1861/33 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் ஆரம்ப வரைபட இல. கொ.9438 இல் துண்டு இல.36, துண்டு இலக்கங்கள் 45 மற்றும் 46 எனத் திருத்தம் செய்யப்படுகின்றது என இத்தால் அறிவிக்கின்றேன்.

1. **துண்டு இல.45**

காணியின் பெயர் : கண்டுபிடிக்க முடியவில்லை ; விபரம் : வீதி ; உரிமை கோருபவர்: அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : ஆர்.பீ.டீ. லால் ஜயசிறி மற்றும் ஆர்.பீ.டீ.சாந்தனி, வரி மதிப்பீட்டு இல.667, பழைய வீதி, களனிமுல்லை, அங்கொடை ; விஸ்தீரணம்: 0.0010 ஹெக்டயார்.

2. **துண்டு இல.46**

காணியின் பெயர் : வரி மதிப்பீட்டு இல.667 இன் காணி, பழைய வீதி; விபரம் : தோட்டம், நிரந்தரக் கட்டிடத்தின் பகுதி காணப்படுகின்றது; உரிமை கோருபவர்: அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : ஆர்.பீ.டீ. லால் ஜயசிறி, வரி மதிப்பீட்டு இல.667, பழைய வீதி, களனிமுல்லை, அங்கொடை ; விஸ்தீரணம்: 0.0031 ஹெக்டயார்.

டீ.எம்.தயாரத்ன,
பணிப்பாளர் (காணி) மற்றும் காணி எடுத்தல் அதிகாரி,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை.

காணிப் பிரிவு,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
3வது மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை,
2015 ஓகத்து 17.

08-812

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.